



# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 01

## கொரோனாவால் நாட்டிற்கு பாரிய இழப்பு



உலகம் முழுவதும் கொவிட் பரவல் அதிகரித்து வருவதன் காரணமாக இவ்வருடம் நாட்டிற்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டம் தொடர்பில் நேற்று நாடாளுமன்றில் கருத்து தெரிவித்த அவர், அரசாங்கத்துக்கு மறைமுக வரிகள் மூலமாக கிடைக்க வேண்டிய வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளதாக தெரிவித்தார். அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்குவகிக்கும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பன தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக மூடப்பட்டுள்ளதால் அதனூடாக கிடைக்க வேண்டிய வருமானமும் இல்லாதுபோயுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும், சர்வதேச நாணய நிதியத்துடனும் கலந்துரையாடி வருவதாகவும், இதன்போது, சலுகை கடன் முறைமை தொடர்பில் மாத்திரம் அவதானம் செலுத்துவதாகவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு சலுகை

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுத்துள்ள இடர்பாடுகளை அடையாளங்கண்டு அவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகள் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான தரவுத் தொகுதியொன்றை தயாரித்துக் கொள்வதற்கும் பொறிமுறையொன்றை முன்மொழிவதற்கும், உத்தியோகத்தர்கள் குழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2020 ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொவிட்–19 பெருந்தொற்று நிலைமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உகந்த சலுகைகள் தொடர்பாக குறித்த உத்தியோகத்தர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இலங்கையின் கொவிட் மரணங்கள் பத்தாயிரத்தைக் கடந்தது - டெல்டாவினால் பெரும் ஆபத்தில் நாடு - தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடரவே வாய்ப்பு

நாட்டில் மேலும் 184 கொவிட் மரணங்கள் நேற்று (07.09.2021) பதிவாகியுள்ளன. நேற்று உயிரிழந்தவர்களில் 87 பெண்களும் 97 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 10,504 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் 2964 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 471,863 ஆக அதிகரித்துள்ளது.

## "ஒற்றுமையே பலம்"

இந்நாட்டில்வாழும்தமிழ்மக்களாகியநாம்மாறிமாறி ஆட்சிக்கு வந்த, வரும் அரசுகளின் அடக்குமுறைகளால் தொடர்ந்தும் இன்னல்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழ் பேசும் சமூகங்களை இந்நாட்டில் தொடர்ந்தும் பெரும்பான்மை சிங்கள இனம் அடக்கியாளவே பார்க்கிறார்கள் என்பது கண்கூடாக தெரிந்த உண்மை.

எனினும் இவற்றுக்கெல்லாம் எதிர்வரும் காலங்களில் முகங்கொடுக்க, எமது எதிர்கால அரசியல் இருப்பை இந்நாட்டில் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள தமிழர் தரப்பு ஆரோக்கியமான நடவடிக்கைகளில் இனிவரும் காலங்களில் இறங்கவேண்டும்.

வடகிழக்கில் இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை என்பது மிகவும் அவசியம். கருத்து மோதல்களால் பிரிந்து கிடக்கும் இக்கட்சிகள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற ஆலமரத்தின் கீழ் ஒன்றிணையவேண்டும். இது காலத்தின் தேவை.

மீண்டும் எதிர்வரும் செம்டெம்பரில் ஐ.நா மனித உரிமைச் சபையில் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், உலகம் எங்கும் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று நிலைமையிலும், நாம் இவ் கூட்டத்தொடரை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறோம். எமது தமிழ் தரப்பின் செயற்பாடுகள் ஆக்கபூர்வமானதாக இருக்கிறதா எனக் கேட்டால், இன்றும் இல்லை என்றே கூறவேண்டும்.

கோட்டபாய ராஜபக்ச தலைமையிலான இந்த அரசு, இனப்பிரச்சினைக்கானத் தீர்வுகளை வழங்கத் தயாராகவில்லை என்பதை அவர்கள் மிகத் தெளிவாக ஏற்கனவே கூறிவிட்டார்கள். இவ் நெருக்கடியான ஆட்சிக் காலகட்டத்தில் தமிழ்த் தரப்பின் ஒற்றுமை என்பது இன்றும் எட்டாக்கனியாகவே இருக்கிறது. ஒன்றுபட்டால் தான் உண்டு வாழ்வு.

## இத்தாலிக்கு பயணமாகும் மஹிந்த ராஜபக்ஷ – புனித பாப்பரசரையும் சந்திப்பார்



இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அவர்கள் அடுத்த வாரமளவில் இத்தாலிக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாக அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இத்தாலி நாட்டின் பொலொக்னா பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் ஐரோப்பிய மாநாடொன்றில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமருடன், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பயணத்தில் வத்திக்கானுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ள இக்குழுவினர் பாப்பரசரையும் சந்தித்து ஆசிபெறவுள்ளனர். 2019 ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து பாப்பரசருக்கு விளக்கம் அளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணையில் திருப்தி இல்லையெனக் கூறி, இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கொழும்பு பேராயர் மல்கம்ரஞ்சித் ஆண்டகை பாப்பரசருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள நிலையில், இது குறித்து விளக்கமளிக்க பிரதமர் இப்பயணத்தை பயன்படுத்த உள்ளதாகவும், இப்பயணத்தை முடித்தவுடன் பீரிஸ் அமெரிக்கா சென்று ஐ.நா பொதுச்சபை அமர்வில் பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேநேரம் மஹிந்த ராஜபக்ஷ இலங்கை வந்தவுடன் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள் அமெரிக்கா பயணமாவார் எனத் தெரிய வருகிறது.

## கர்ப்பிணித் தாய்மார்களைத் தாக்கும் கொவிட்

தற்போது கர்ப்பிணித் தாய்மார்களிடையே கொவிட் –19 பரவலானது வேகமாக அதிகரித்துள்ளதுடன், அவர்களுக்கு ஒட்சிசன், அதிதீவிர சிகிச்சை பிரிவு மற்றும் மருத்துவமனையில் அனுமதி தேவைப்படும் விகிதம் என்பன அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள் உடனடியாக கொவிட் –19 தடுப்பூசியைப் பெற வேண்டும். ஏனையவர்களுடன் ஒப்பிடும்போது அவர்கள் அதிக சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும், எனவே, அவர்கள் பாதுகாப்பாக இருக்க தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என குடும்ப நல பணியகத்தின் பணிப்பாளரான வைத்தியர். சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.



# டயர் வெடித்ததால் தர்ப்பூசணிகள் வீதியில்



(நூருள் ஹுதா உமர்)

கல்முனை பாண்டிருப்பு பிரதேசத்தில் நேற்று இரவு 07.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் வாகனத்தில் பயணித்த இருவரும் அதிஷ்டவசமாக தப்பிக்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட ஓட்டமாவடி பிரதேசத்திலிருந்து அக்கரைப்பற்றை நோக்கி ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள 1720 கிலோ கிராம் நீர் பூசணிக்காயை ஏற்றிக்கொண்டு வந்த லொறியே இந்த விபத்தில் சிக்கியது. பின்பக்க டயர் வெடித்தமையே விபத்துக்கான காரணம் என அறியப்பட்டுள்ளது.

ஸ்தலத்திற்கு விரைந்த கல்முனை போக்குவரத்து பொலிஸார் வாகனப் போக்குவரத்தை நிறுத்தி பிரதேச மக்கள் மற்றும் வீதிப்பயணிகளின் உதவியுடன் கவிழ்ந்து கிடந்த லொறியே நிமிர்த்தினர். சுமார் 20 நிமிடம் அளவில் வேகமாக செயற்பட்ட பிரதேசவாசிகள் குறித்த லொரியையும், வீதியில் விழுந்து கிடந்த நீர் பூசணியையும் மீட்டனர். இருந் போதிலும் சுமார் 200 கிலோ அளவில் சேதமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் மீளவும் விளக்கமறியலில்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.


அதனடிப்படையில் அவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



# இலங்கைக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

இலங்கையில் அண்மையில் கோரத் தாண்டவம் ஆடிவரும் டெல்டா பிளஸ் மற்றும் அதன் மூன்று பிறழ்வுகள் பாரிய உயிர் சேதங்களையும், தொற்றாளர்களின் எண்ணிக்கையையும் மலை போல் அதிகரித்துவரும் நிலையில், தென்னாபிரிக்கா உட்பட சில நாடுகளில் பரவிவரும் மிக வீரியம் கொண்ட சி.l.2 வைரஸ் இலங்கைக்குள்ளும் பரவும் அபாயம் தென்படுவதாக வைரஸ் தொடர்பான விசேட நிபுணரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா உள்ளிட்ட சில நாடுகளில் மிக வேகமாக பரவிவரும் இவ்வைரசானது எமது நாட்டுக்குள் பரவுமானால் அது பாரிய அச்சுறுத்தலாக மாறுவதுடன் தற்பொழுது காணப்படும் உயிரிழப்புக்களை விட பல மடங்கு உயிர்காவு கொள்ளும் நிலை வரலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# கொரோனா வைரஸ் தடுப்பூசி பெற்றுக்கொண்டாலும் நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது

வட மாகாணத்தில் கொரோனாத் தொற்றுக்கு எதிரான தடுப்பூசி வழங்கும் பணி மிக வேகமாக முன்னெடுத்து வருகின்றபோதிலும், கொரோனா தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டாலும் அலட்சியமாக செயற்படாதீர்கள், கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் 30 வயதுக்கு மேற்பட்டோர் 6 இலட்சத்து 57 ஆயிரத்து 947 பேர் உள்ளனர். அவர்களில் 5 இலட்சத்து 58 ஆயிரத்து 131 பேருக்கு இன்றுவரை முதலாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் இரண்டாம் கட்ட தடுப்பூசி இரண்டு இலட்சத்து 94 ஆயிரத்து அறுபத்தி ஒன்பது பேருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 2ஆம் கட்டத் தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இத் தடுப்பூசிகள் 2 வாரத்துக்கு முன்னெடுக்கப்படும் என்றும் அனைவரும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறும் அத்தோடு இயலுமானவரை வெளியில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும் அவர் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஆப்கானில் தலிபான்கள் பதவியேற்பு நிகழ்ச்சி



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பதவி யேற்பு நிகழ்ச்சியில் 6 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறுவதாக அறிவித்து வெளியேற ஆரம்பித்தவுடனேயே தலிபான்கள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டனர். படிப்படியாக ஒவ்வொரு மாகாணமாகக் கைப்பற்றிய தலிபான்கள் கடந்த ஒகஸ்ட் 15 ஆம் திகதியன்று தலைநகர் காபூலை தங்கள் வசம் கொண்டு வந்தனர். இதனையடுத்து அமெரிக்க மற்றும் மேற்கத்தியப் படைகள் ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் வெளியேறவேண்டும் என்றும் நிபந்தனை விதித்தனர். அமெரிக்காவின் கடைசி படையும் அங்கிருந்து வெளியேறியது.

இந்நிலையில் அங்கு முறைப்படி ஆட்சி அமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அமைக்கும் நிகழ்ச்சியில் 6 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அவை ஐக்கிய அமீரகம், பாகிஸ்தான், சவுதி அரேபியா சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் ஆகும். இதில் பாகிஸ்தான், ஐக்கிய அமீரகம், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் தலிபான்கள் ஆட்சி நடத்திய 90களிலே அவர்களுக்கு ஆதரவு அளித்தன.

தற்போது தலிபான்கள் நட்புப் பட்டியலில் புதிதாக சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் சேர்ந்துள்ளன. கத்தாருக்கும் தலிபான்கள் பதவியேற்பு நிகழ்ச்சியில் அழைப்பு விடுக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் ஆப்கான் தலைநகர் காபூலில் தலிபான்கள் ஆட்சிக்கு எதிராகவும், பாகிஸ்தானுக்கு எதிராக போராட்டங்கள் வலுத்து வருகின்றன.




# சீனாவை வாட்டும் வறட்சியால் 15 லட்சம் பேர் பாதிப்பு

வடமேற்கு சீனாவின் கன்சு மாகாணத்தில் கடந்த ஜூலை முதல் தொடர்ந்து கடும் வெப்பமான வானிலை நிலவுவதால் அங்குள்ள பல மாவட்டங்கள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளன. "பூமியின் வெப்பநிலை 2 டிகிரி செல்சியசைக் கடக்கும் சூழல் ஏற்பட்டால் மனித இனம் வாழ்வதற்கான சூழல் இல்லாமலாகிவிடும்" என. ஐபிபிசி எச்சரிக்கை விடுத்துள்ளது. காலநிலை மாற்றத்தாலேயே மோசமான அளவு மழை வெள்ளம். வறட்சி. காட்டுத் தீ ஆகியவை ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஏற்கெனவே மேற்கு ஐரோப்பாவின் ஜெர்மனி. நெதர்லாந்து. லக்சம்பர்க். பெல்ஜியம். ப்ருசல்ஸ் ஆகிய நாடுகளிலும் காலநிலை மாற்றத்தால் பெரும் இயற்கை பேரிடர்கள் நிகழ்கின்றன.

இந்நிலையில் சீனாவின் சினுவா அமைப்பு வெளியிட்ட செய்தியில் தெரிவித்து உள்ளதாவது. சீனாவின் கன்சு மாகாணத்தில் உள்ள பல மாவட்டங்களில் நிலவும் அதீத வெப்ப நிலை காரணமாக கடுமையான வறட்சி நிலவுகிறது. இதனால் சுமார் 15 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். 60.000 ஹெக்டேர் அளவில் பயிர் சேதம் அடைந்துள்ளது. செப்.. மாதமும் கன்சு மாகாணத்தில் மழை பெய்ய வாய்ப்பு குறைவு என்றும். இதனால் வறட்சி சில நாட்களுக்கு தொடரும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



# இறுதிப் போட்டியில் அபார வெற்றி பெற்ற இலங்கை அணி

இலங்கை மற்றும் தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நேற்றைய தினம் ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் ஆரம்பமானது. இதில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இலங்கை அணி, 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இலங்கை அணியின் சார்பில் சரித் அசலன்க 2 பவுண்டரிகள் அடங்களாக 47 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்தார். தென்னாபிரிக்காவின் பந்து வீச்சில் கேஷவ் மஹாராஜ் 38 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றி பந்து வீச்சில் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இதற்கமைய, தென் ஆபிரிக்க அணி 204 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெத்தாடிய நிலையில், துடுப்பாட்ட வீரர்களால் இலங்கையின் அபார பந்துவீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல், 30 ஓவர்களுக்குள் அணி சுருண்டது. சகல விக்கெட்டுக்களையும் இழந்த தென்னாபிரிக்க அணியினர் 125 ஓட்டங்களையே பெற்றனர். இதனடிப்படையில் இலங்கை அணி 78 ஓட்டங்களால் இப் போட்டியை வெற்றிகொண்டு, இத்தொடரைக் கைப்பற்றியுள்ளது.